### 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு! சென்னையில்

# சிங்கப்பூர் நிறுவன சர்வதேச தொழில்நுட்பப் பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 1 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.10.2023) சென்னை, பல்லாவரம் ரேடியல் சாலையில், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கேப்பிட்டாலாண்ட் (Capitaland) குழுமத்தின் துணை நிறுவனமான ரேடியல் ஐ.டி. பார்க் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (Radial IT Park Private Limited), 50,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 5 மில்லியன் சதுர அடி பரப்பளவில் அமைத்து வரும் தொழில்நுட்ப பூங்காவில், முதற்கட்டமாக 1.3 மில்லியன் சதுர அடி பரப்பளவில் அமைத்துள்ள சர்வதேச தொழில்நுட்ப பூங்காவை (International Tech Park) திறந்து வைத்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கையின் அடிப்படையில், கிராமப் புறங்களைச் சார்ந்த, படித்த இளைஞர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டங்களுக்கு அருகிலேயே அதிக எண்ணிக்கையிலான உயர்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

அதன்படி, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்புள்ளதாக, மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், உதகமண்டலத்தில் புதுமையான அம்சங்களுடன் ஒரு மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கையும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கேப்பிட்டாலாண்ட் (Capitaland) குழுமம்**

ஆசியாவின் மிகப்பெரிய வணிக குழுமங்களில் ஒன்றான கேப்பிட்டாலாண்ட் குழுமம், பல நாடுகளில், முப்பதுக்கும் மேற்பட்ட சில்லறை வணிகம், அலுவலக வளாகங்கள், தங்குமிடங்கள், வணிகப் பூங்காக்கள், போக்குவரத்து மேலாண்மை மற்றும் தரவு மையங்களை நிறுவியுள்ளது.

முன்னதாக அசெண்டாஸ் (Ascendas) என அறியப்பட்ட கேப்பிட்டாலாண்ட், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில் முதல் தனியார் தகவல் தொழில்நுட்ப வணிகப் பூங்காவை சென்னையில் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

இக்குழுமம் சென்னை தரமணியில் சர்வதேச தொழில்நுட்ப பூங்கா, செங்கல்பட்டு, மஹிந்திரா வேர்ல்ட் சிட்டியில் சைபர்வேல் (CyberVale) மற்றும் சென்னை, பல்லாவரம் ரேடியல் சாலையில் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சர்வதேச தொழில்நுட்ப பூங்கா என மூன்று வணிக பூங்காக்களைக் கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்ட மன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய்,

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல்நாத், கேப்பிட்டாலேண்ட் இன்வெஸ்ட்மெண்ட் நிறுவனத்தின் தலைவர் மிகுவல் கோ, கேப்பிட்டாலேண்ட் இன்வெஸ்ட்மெண்ட் இந்தியா நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் சஞ்சீவ் தாஸ்குப்தா, இந்திய வணிகப் பூங்காக்கள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் கவுரி சங்கர் நாகபூஷணம், சென்னை செயல்பாடுகள் தலைவர் சி.வேலன், மிட்சுபிஷி எஸ்டேட் நிறுவனத்தின் செயல் அலுவலர் மாசநோரி இவாசே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (30.10.2023), திரைப்பட இயக்குநர் விக்ரமன் இல்லத்திற்கு நேரடியாகச் சென்று, விக்ரமனின் துணைவியாருக்கு தனியார் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட தவறான சிகிச்சையின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு மருத்துவக் குழுவினருடன் நேரில் சந்தித்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கும் பணிகளை மேற்கொண்டார். இந்நிகழ்வில் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி மற்றும் மருத்துவ குழுவினர் உடனிருந்தனர்.

### முதல்வர் அறிவுரையேற்று - மருத்துவக் குழுவோடு வீட்டுக்குச் சென்றார், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்!

# முதல்வருக்கும், அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கும் - இயக்குநர் விக்ரமன் நன்றி!

## விக்ரமனின் துணைவியாருக்கு - வீட்டிலேயே சிகிச்சை அளிக்க ஏற்பாடு!

சென்னை, நவ. 1-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (30.10.2023), திரைப்பட இயக்குநர் விக்ரமனின் இல்லத்திற்கு நேரடியாகச் சென்று, விக்ரமனின் துணைவியாருக்கு தனியார் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட தவறான சிகிச்சையின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு மருத்துவக் குழுவினருடன் நேரில் சந்தித்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கும் பணிகளை மேற்கொண்டார்.

இயக்குநர் விக்ரமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

எனது மனைவி 5 வருடகாலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவரது முதுகில் தவறான அறுவை சிகிச்சை செய்யப்பட்டதன் காரணமாக நடக்க முடியாமல் போனது. இது தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தேன்.

அதனைப் பார்த்த முதலமைச்சர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் இது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 15க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்களுடன் எனது இல்லத்திற்கு வந்து, எனது மனைவியை பரிசோதனை செய்துள்ளார்கள். இப்படி உடனடி நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றி.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடன், உயர் மருத்துவக் குழுவினர் பரிசோதனை செய்ததில் விக்ரமன் அவர்கள் துணைவியாருக்கு நரம்பியல் ரீதியாக (Neurology) அவரது சக்தி 3/5 என்று உள்ளது. இது ஒரு நல்ல நிலை தான், எனவே இவருக்கு பிசியோதெரபி சிகிச்சையின் மூலம், உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். இவருக்கும் சர்க்கரை (Diabetis), உயர் இரத்த அழுத்தம் (Hypertension) ஆகியவை கட்டுப்பாட்டில் உள்ளது.

எனவே விக்ரமனின் துணைவியார் அவர்கள் வீட்டில் இருந்தபடியே உரிய பயிற்சிகள் மற்றும் சிகிச்சைகள் எடுத்துக்கொள்வதன் மூலம் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு, குணமடையும் வாய்ப்புகள் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.




